நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மட்டும் 14 இலட்சம் மெட்ரிக் டன் நெல் இந்த ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்தப் பாதுகாக்கும் முறை அனைத்துக் காலங்களிலும் பின்பற்றப்படும் முறை ஆகும். நெல் கூடுதலாக இரண்டு, மூன்று மாதங்களுக்கு வரும். அது உங்களுக்கே தெரியும். அந்த 2, 3 மாதங்களில் வெளியில் storage செய்து, இரயில்மூலம் அந்த நெல்லை வெளியில் அரவைக்கு அனுப்பப்படும் முறை, ஆண்டாண்டு காலமாக இருந்து கொண்டிருக்கின்ற முறை. அந்த முறைதான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. உங்கள் தொகுதியில் எந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவைப்படுகின்றன என்று சொன்னால், தேவைக்கேற்ப அவ்விடத்தை ஆய்வு செய்து, உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு திறந்து வைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

19—

வீட்டுமனைப் பட்டா

***398—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், மருவூர் வருவாய் கிராமம் தெற்கு ஆதி திராவிடர் தெருவில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், மருவூர் கிராமம், நத்தம் நில உடைமை மேம்பாட்டுத் திட்ட ஆவணங்களின்படி, புல எண் 80/4ஏ, 84 உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, நத்தம் பட்டா எண் 170–ல் முத்துசாமி நாடார் மகன் முனுசாமி மற்றும் 26 நபர்களின் பெயர்களில் பதிவாகியுள்ளது. இதில், மருவூர் தெற்கு ஆதி திராவிடர் தெருவில் 58 ரயத்துவாரி வகைபாடு கொண்ட உட்பிரிவுகள் கொண்ட மனைகளில் இந்து ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 72 குடும்பங்கள் சுமார் 25 வருடங்களாக வசித்து வருகிறார்கள். இவர்கள் வசித்துவரும் வீட்டுமனைகள் வேறு நபர்களின் பெயர்களில் பதிவாகி உள்ளதாலும், மேற்படி வீட்டுமனைகளில் தற்போது வசித்துவரும் குடும்பத்தினரிடம் இவ்விடத்தின் உரிமை குறித்து எவ்விதமான ஆவணங்களும் இல்லை என்பதாலும், உரிய வழிமுறைகளைப் பின்பற்றி விசாரணை செய்யப்பட்டு, இவர்களுக்கு மனைப்பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இந்த நிலம் தொடர்பாக வருகின்ற காலத்தில் ஏதேனும் ஆட்சேபணைகள் பெறப்பட்டால், மேற்படி மனைகள் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, மருவூர் தெற்கு ஆதி திராவிடர் தெருவில் வசித்துவரும் 72 இந்து ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த குடும்பத்தினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

முற்பகல் 10–40

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலங்களின் உரிமையாளர்கள், உரிமை கோருகிற அளவிற்கு அங்கு யாரும் இல்லையென்று அறிகிறேன். தொடர்ந்து 30 ஆண்டுகளாக அவர்கள் அங்கு பரம்பரை பரம்பரையாகக் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தின் தொகுப்பு வீடுகளோ, பசுமைத் திட்டத்தின்கீழ் வீடுகளோ கிடைக்க வாய்ப்பு இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய

விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், தொடர்ந்து 15 ஆண்டுகளாகக் குடியிருந்து வருகிறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நில உரிமையாளர்கள் எந்த உரிமையும் கோரவில்லை என்று சொன்னார்கள். நில உரிமையாளர்கள் உரிமை கோரவில்லை என்றாலும், அரசு ஆவணங்களிலே பெயர் மாற்றம் செய்த பின்னர்தான், நாம் பட்டா வழங்க முடியும். அதற்காகத்தான் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி நாம் பட்டா வழங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து குடியிருந்து வருகிறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டதாகச் சொன்னார். அப்படியொரு விதிமுறை இருப்பதாகத் தெரியவில்லை. ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவதற்கு* One–time Special Scheme *என்கின்ற* G.O. *போட்டார்கள். 10 ஆண்டுகள் என்பதை 5 ஆண்டுகள், 3 ஆண்டுகள் என்று குறைத்தபோது, அது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, அது 5 ஆண்டுகள் என்று வரன்முறைப்படுத்தப்பட்டது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலேதான் பத்தரை இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 12½ இலட்சம் பேருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி ஏழையெளியவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட, நிலத்தின் மதிப்பு கூடுதலாக இருக்கும் இடங்களிலும், நிலப் பற்றாக்குறை இருக்கிற இடங்களிலும் கூட்டுப் பட்டா என்ற புதிய அணுகுமுறையைக் கொண்டு வந்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளியவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைக்கின்ற வகையிலே*

2016 ஆகஸ்ட் 3]

அறிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருவூர் கிராமத்திலே அவர்கள் தொடர்ந்து இரண்டு தலைமுறைகளாகக் குடியிருந்து வருகிறார்கள். நிலத்தின் உரிமையாளர்களில் சிலர் இந்த ஊரிலேயே இல்லை; சிலர் இறந்துபோய் விட்டார்கள். அவர்கள் அனுபவித்து வருகின்ற இடத்திற்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில். தொடர்ந்து பரம்பரையாகக் குடியிருந்த ஆதி திராவிட குடும்பங்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதனடிப்படையில் மருவூர் கிராம ஆதி திராவிட மக்களுக்குப் பட்டா வழங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவை அவர்கள் வசிப்பதற்கு இடம் வழங்குவது என்பது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிலையான ஒரே கொள்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளியவர்களுக்கு ஒப்படை செய்வதற்கு எங்கெங்கு நிலங்கள் இருக்கிறதோ, அங்கெல்லாம் வீட்டுமனைகளைத் தகுதியுள்ள நபர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகின்றார்கள். அந்த வகையிலே, இது தனியார் பெயரிலே பதிவாகியிருக்கின்ற காரணத்தினால்தான் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி, தேவைப்பட்டால் நிலத்தை ஆர்ஜிதம் செய்து வழங்கலாம் என்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆணைக்கிணங்க அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். இந்தியத் திருநாட்டின் ஈடு இணையற்ற தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய சீர்காழி தொகுதியிலே பல ஆண்டுகளுக்கு முன்பாக நிலம் கையகப்படுத்தப்பட்டு, திருவெண்காடு மற்றும் திட்டை கிராமங்களைச் சார்ந்த ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்படாமல் நிலுவையிலுள்ளன. அதை விரைவில் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவாய்த் துறையின் மூலமாக ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனை ஒப்படைப்பைப் பொறுத்தளவிலே, வருவாய் நிலையாணை எண் 21–ன்கீழ் வரையறைக்குட்பட்டு வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களைப் பொறுத்தளவில் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.30,000/–க்குக் குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தளவில் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்குக் குறைவாக உள்ளவர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது. ஆகவே, வருவாய் நிலையாணை எண் 21–ன்கீழ் வரையறைக்குட்பட்டு உறுப்பினரின் கோரிக்கை இருக்குமேயானால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, கனிவோடு அதனைப் பரிசீலனை செய்து, உடனடியாக ஆதி திராவிட மக்களுக்குப் பட்டா வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையில் பேசுகிற வாய்ப்பை*

2016 ஆகஸ்ட் 3]

உருவாக்கித் தந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கும், இளைஞர்களின் எழுச்சி நாயகர் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தூத்துக்குடி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்வீரர்களுக்கும், தூத்துக்குடி தொகுதி மக்களுக்கும் இத்தருணத்தில் எனது வணக்கத்தையும், நன்றியையும் உரித்தாக்குகிறேன். தூத்துக்குடி மாநகரத்தில் அம்பேத்கர் நகர், லோகியா நகர், மினி சகாயபுரம், பாத்திமா நகர் போன்ற பல்வேறு பகுதிகளில் 30 ஆண்டுகளுக்குமேல் குடியிருந்துவரும் ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவதற்கு வருவாய்த் துறை (நிலை) ஆணை எண் 21–ன்கீழ் பல்வேறு விதிமுறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆட்சேபகரமான புறம்போக்கிலே நீர்நிலைப் புறம்போக்கும் இருக்கிறது. நீர் நிலை இல்லாத புறம்போக்கும் இருக்கிறது. ஆகவே, ஆட்சேபகரமற்ற, தகுதியுள்ள நிலங்களில் இருப்பார்களேயானால் அவர்களுக்கு உடனடியாக வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு போர்க்கால அடிப்படையில் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட, ஒட்டன்சத்திரம் நகராட்சியில், காந்தி நகரின் 5–வது வார்டில் சுமார் 750 பேர் 25 ஆண்டுகளாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு,

இதுவரையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. அங்கே அவர்களுக்கு எல்லாம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மின் இணைப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துகூட சமீபத்தில் ஒரு அங்கன்வாடி மையம் கட்டப்பட்டு, திறக்கப்பட்டிருக்கிறது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த மக்களுக்கு விரைவிலே வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புவதோடு, பூமிதான Board என்பது அமைக்கப்படாமல் இருக்கிறது, அமைத்துவிட்டார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இலவச வீட்டுமனைப் பட்டா என்பது இரண்டு வகைகளில் வழங்கப்படுகிறது. ஒன்று Regularisation, வரன்முறைப்படுத்துவது. இன்னொன்று Regular Scheme. Regularisation, வரன்முறைப்படுத்துவது என்பது ஏற்கெனவே குடியிருப்பவர்களுக்கு தகுதியின் அடிப்படையிலே வரன்முறைப்படுத்தப்படுகிறது. ஆக்கிரமிப்புகள் ஆட்சேபகரமற்ற நிலையில் இருந்தால் குடியிருப்பவர்களுக்கு உடனடியாக வழங்கப்படுகிறது. ஆட்சேபகரமற்ற புறம்போக்குகள் இருக்கும்போது நமக்கும் எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், அவர்கள் ஆட்சேபகரமான புறம்போக்காக இருக்கிற நீர்வழிக் கால்வாய், ஏந்தல், ஏரி, ஏரிக்கரை, இட்டேரி, குட்டை, பெரிய குளம், நீர்ப்பிடி, ஓடை, ஊரணி, குளம், பொதுப் பணித் துறை கால்வாய், நீர்த்தேக்கம், அணைக்கட்டு, ஆறு, பெரிய குட்டை, வாய்க்கால், வாரி நீர்த்தடம் மற்றும் கிணறு போன்ற நீர்வழிப் புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்து விடுகிறார்கள். அதைப்போல, நீர்நிலைப் புறம்போக்கு அல்லாதவை சுடுகாடு, மயானம், வண்டிப்பாதை, மாநகராட்சி, வனம், காடு, வன எல்லை, மேய்ச்சல் தரை, நெடுஞ்சாலை, நெடுஞ்சாலை ரோடு, களம், கோயில், சந்து, தெரு, மந்தைவெளி, தேசிய நெடுஞ்சாலை, பஞ்சாயத்து சாலை, பாதை, பொதுப் பணித் துறை, வருவாய் தடையாணைக்குட்பட்ட நிலங்கள், ஒதுக்கப்பட்ட காடு, சாலை,

தோப்பு இவற்றிலெல்லாம் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும், அதில் குடியிருப்பு இருந்தாலும், அதற்கு நீங்கள் எந்தச் சலுகைகள் செய்தாலும் விதிமுறைகளுக்குட்பட்டு அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க முடியாது. எந்தெந்த நிலங்களில் வழங்கலாம் என்று சொன்னால், ஆட்சேபணை அற்ற புறம்போக்கு நிலங்கள் அனாதினம், தீர்வை ஏற்பட்ட புன்செய் தரிசு, தீர்வை ஏற்பட்ட நன்செய் தரிசு, கல்லூரி புறம்போக்கு, உரக்குழி, குன்று மலை, களவாய், கல்லாம்புத்து, கரடு, பாறை, மேடு, பள்ளம், நந்தவனம், நத்தம், உவர் பூமி, விளையாட்டு மைதானம், குவாரி, தடம், தரிசு, திடல், வெட்டுக்குழி, தீர்வை ஏற்படாத புன்செய் தரிசு போன்ற இடங்களிலே அவர்கள் குடியிருப்பார்களேயானால், ஆக்கிரமிப்பு செய்திருப்பார்களேயானால் விதிமுறைகளுக்குட்பட்டு, வருவாய்த் துறை (நிலை) ஆணை எண் 21 மற்றும் 21A–ன்படி அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் ஒரு Committee–யைப் பற்றிச் சொன்னார். அது பரிசீலனையில் இருக்கிறது. உரிய ஆய்விற்குப் பின்னால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை அமைத்துத் தருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள் பேசிறபோது, 90 இலட்சம் மெட்ரிக் டன் என்று குறிப்பிட்டார். அது கொள்முதலா அல்லது விளைச்சலா என்பது சரியாகக் கேட்கவில்லை. கொள்முதல் என்று சொன்னால் அது தவறான தகவல். விளைச்சலே அப்போது 90 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு வரவில்லை. கொள்முதல் என்று சொன்னால், ஒரே ஆண்டிலே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு விளக்கம் சொல்கிறார்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *இதுவரை அதிகபட்சமாக 2012 ஆம் ஆண்டிலே 24 இலட்சம் மெட்ரிக் டன் மாண்புமிகு*

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலேதான் செய்யப்பட்டது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: ஒரே பருவத்திலே விளைச்சல் செய்யப்பட்டது. ஆனால், 90 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் என்று சொன்னால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். வாய்ப்பு வரும்பொழுது தருகிறேன். ஒரே கேள்வியில் எல்லோரும் வாய்ப்புக் கேட்டால் எப்படி தர முடியும்? வாய்ப்பு தர முடியாது. ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு வரும்பொழுது கண்டிப்பாக தருகிறேன். உங்களுக்கும் தருகிறேன். உட்காருங்கள். வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

சமுதாயக் கூடம்

***1173–திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, அத்திப்பாளையம் ஊராட்சி, காமராஜ் நகரில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,